*29*

# மக்கள், விழும் குழிகள் மற்றும் கொள்கைகள்

## (13:1-14)

எபிரெயருக்கு எழுதிய நிருபம், “ஒரு ஆய்வுக்கட்டுரையைப் போன்று தொடங்குகிறது, ஒரு பிரசங்கத்தைப் போன்று தொடருகிறது மற்றும் ஒரு நிருபத்தைப் போன்று முடிகிறது” என்று குறிப்பிட்டுள்ளோம்.[1] நீல் R லைட்ஃபூட் அவர்கள், 13ம் அதிகாரத்தை, இந்தப் புத்தகம் முழுவதற்கும் என்ற வகையில் “விவரிக்கப்பட்ட முடிவு”[2] என்று அழைத்தார். இதில் நாம், மிக வேகமான வரிசை முறையில் தரப்பட்ட, குறுகிய முடிவு அறிவுறுத்துதல்களின் வரிசைத் தொடர் ஒன்றைக் காணுகிறோம். இந்த அதிகாரத்தின் முதல் பகுதியை நாம் இந்தப் பாடத்திலும் பிந்திய பகுதியை நமது (அடுத்த) கடைசிப் பாடத்திலும் எடுத்துரைத்து முடிப்போம்.

**உதவிசெய்ய மக்கள் (13:1-13)**

(1) *சகோதரர்களுக்கு[3] அன்பு தேவைப்படுகிறது* (வசனம் 1). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர். தமது வாசகர்கள் பரிசுத்தவான்கள் மீது கொண்டிருந்த அன்பிற்காக அவர்களை முன்பே பாராட்டி இருந்தார் (6:10). இப்போது அவர், அந்த அன்பில் அவர்கள் *தொடர்ந்து இருக்கும்படி* அவர்களை வேண்டிக் கேட்டுக்கொண்டார் (காண்க 1 பேதுரு 4:8; 2 யோவான் 5).

(2) *அந்நியர்களுக்கு உபசரிப்பு தேவைப்படுகிறது* (வசனம் 2). சந்தர்ப்பப் பொருளில், “அந்நியர்கள்” என்பது அனேகமாக, அவர்கள் முன்பு சந்தித்திராத கிறிஸ்தவர்களைக் குறிக்கலாம். உபசரிப்பு என்பது ஒரு வலிவார்ந்த கிறிஸ்தவச் செயல்பாடாக உள்ளது (ரோமர் 12:13; 1 பேதுரு 4:9). அந்த நாட்களில், உபசரிப்பு என்பது நடைமுறையில் அத்தியாவசியமானதாக இருந்தது: பெரும்பான்மையான சத்திரங்கள், தங்குவதற்கு விரும்பப்படாதவைகளாக இருந்தன, மற்றும் பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் ஏழைகளாக இருந்தனர். உபசரிப்புத் தன்மை உள்ளவர்களாக இருப்பதில் இருந்து எதிர்பாராத ஆசீர்வாதங்கள் வரக்கூடும் என்று இவ்வசனப்பகுதி வலியுறுத்துகிறது.

(3) *தீங்கு அனுபவிப்பவர்களுக்கு பரிவிரக்கம் தேவைப்படுகிறது* (வசனம் 3). கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்திற்காகச் சிறையில் அடைக்கப்பட்டும் மற்ற வழிகளிலும் துன்புற்றனர். கடந்தகாலத்தில் வாசகர்கள், சிறைச்சாலையில் இருந்தவர்கள் மீது பரிவிரக்கம் காண்பித்து இருந்தனர் (10:34). இப்போது அவர்கள், தீங்கு அனுபவிப்பவர்களின் இடத்தில் தங்களை வைத்து, அவர்களுடன் அதைப் பகிர்ந்து கொள்ளுதலைத் தொடரும்படி ஊக்குவிக்கப் பட்டனர். உண்மையான பரிவிரக்கம் என்பது தன்னைச் செயல்களில் வெளிப்படுத்துகிறது

*(மத்தேயு 25:36; காண்க யாக்கோபு 2:15, 16).*

**தவிர்க்க வேண்டிய விழும் குழிகள் (13:4-6)[4]**

(1) *வேசித்தனமும் விபசாரமும்* (வசனம் 4). "விபசாரம்" என்பது திருமணத் துணைதவிர வேறொரு நபரிடம் ஒருவர் பாலுறவு ரீதியான பாவத்தில் ஈடுபடுதலைக் குறிக்கிறது. "வேசித்தனம்" என்பது இவ்வசனத்தில், வேறு எவ்வகையான பாலுறவு ரீதியான பாவத்தையும் (எடுத்துக்காட்டாக, வசனரீதியாக ஒருவர் மற்றவருடன் திருமணம் செய்திராத இருவருக்கு இடையில் உள்ள பாலுறவு ரீதியான பாவத்தை) குறிக்கும் பொதுவான சொற்றொடராக உள்ளது. *திருமணத்தில்* பாலுறவு என்பது "கனத்திற்குரியதாக" மற்றும் "தீட்டல்லாததாக" உள்ளது. திருமணத்திற்குப் புறம்பே இது கனவீனமானதாக மற்றும் "தீட்டுள்ளதாக" இருக்கிறது என்பதே அவசியமான முடிவாக உள்ளது. ஒழுக்க தர அளவைகள் தாழ்ந்தவைகளாக இருந்த மற்றும் புறதெய்வ "ஆராதனையில்" பாலுறவு நடவடிக்கை இணைந்திருந்த வேளையில் இந்த அறிவுறுத்துதல் மிகவும் தேவைப்பட்டிருந்தது. இந்தப் புத்திமதி இன்றைய நாட்களில் இன்னமும் மிகவும் தேவைப்படுவதாக உள்ளது.

(2) *பொருளாசை மற்றும் திருப்தியின்மை* (வசனங்கள் 5, 6). கிறிஸ்தவர்கள் பொருளாசையின்றி, ஆனால் அதற்கு மாறாக மனநிறைவுடன் இருக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்ளப் படுகின்றனர். தேவன் நம்முடன் இருப்பதாக வாக்களித்துள்ளார். அவர் நமது பக்கம் இருக்கும்போது, நாம் எதற்கும் அஞ்சாது இருக்க வேண்டும். தங்கள் உயிர் உட்பட அதிகமானவற்றை இழந்து போகக்கூடிய நிலையில் இருந்த முதல் வாசகர்கள் கிறிஸ்துவுக்குள் உண்மையாக நிலைத்திருந்தால், அவர்களுக்கு இந்த போதனை விசேஷித்த அர்த்தம் கொண்டிருந்தது. இந்த சத்தியம் நமக்கும் - அதிகமாகக் கொண்டிருந்து ஆனால் திருப்தியற்ற நிலையில் உள்ள தனிநபர்களுக்கு - விசேஷித்த அர்த்தம் கொண்டுள்ளதாகவும் இருக்கிறது.

## கவனம் செலுத்த வேண்டிய கொள்கைகள் (13:7-14)

(1) *உண்மையுள்ள போதகர்களைப் போலச்செய்யுங்கள்* (வசனம் 7). எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் தோற்றகால வாசகர்கள், தங்களுக்குப் போதித்திருந்தவர்களைப் பற்றி நினைவுகூரும்படியும் (காண்க 2:1-4) பின்பு தேவபக்தியுள்ள அவர்களின் வாழ்வைப் போலச் செய்யும்படியும் கூறப்பட்டிருந்தனர். சாத்தியமானது என்ன என்பதை மாபெரும் உதாரணங்கள் செயல்விளக்கப் படுத்துகின்றன. இந்தக் கிறிஸ்தவர்கள் உண்மையுள்ளவர்களாக *இருக்க முடிந்தது*. முன்பு கடந்து சென்றிருந்தவர்களின் உதாரணங்கள், இது செய்யப்பட முடியும் என்பதை நிரூபித்தன.

(2) *தவறான போதனையினால் அலைப்புண்டு இராதிருங்கள்* (வசனங்கள் 8, 9). அவர்கள் தங்கள் முந்திய நடத்துனர்களிடம் இருந்து பெற்றிருந்த போதனை, அதை அவர்களுக்குக் கொடுத்திருந்தவரின் - மாறாதிருந்தவரான இயேசுவின் - நிமித்தம் மாறாதிருந்தது (வசனம் 8). விஷயம் இப்படி இருந்ததால், "பலவிதமான அந்நிய போதனைகளுக்கு" செல்லும்படி, அவர்கள் அந்த போதனையை விட்டுவிடக் கூடாதிருந்தது (வசனம் 9அ). இந்த "அந்நிய போதனைகள்" எவை என்பதைத் தோற்றகால வாசகர்கள்

அனேகமாக அறிந்திருக்கலாம். “உணவு” [“போஜனம்”] என்பது இங்கு குறிப்பிடப்பட்டிருப்பதால், ஒருவேளை இது பழைய ஏற்பாட்டில் இருந்த உணவுதொடர்பான பிரமாணங்களாக இருந்திருக்கலாம். இந்த சகோதரர்கள் மத்தியில் சுற்றுக்கு விடப்பட்டிருந்த “அந்நியபோதனை” எதுவாக இருந்த போதிலும், தவறான உபதேசங்கள் அவர்களை ஆசீர்வதிக்க இயலாதிருந்தன. இன்று போலவே அன்றும் புதிய உடன்படிக்கையின் கிருபை மாத்திரமே ஆசீர்வாதங்களைக் கொண்டு வர முடிந்திருந்தது.

8ம் வசனம் இன்றைய நாட்களுக்குத் தனிசிறப்பு கொண்டுள்ளது. இயேசு நமது மாபெரும் தற்காலத்தியவராக இருப்பதால், “பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசம்” (யூதா 3) இன்னமும் நடைமுறைக்கு உரியதாக உள்ளது. நமது ஜீவனுள்ள பிரதான ஆசாரியரிடம் இருந்து நாம் *இன்னமும்* உதவி பெறுகிறோம். நாம் *இன்னுமும்* “அந்நிய போதனையினால்” - அவைகள் எவ்வளவு கவர்ச்சிகரமாகத் தோன்றினாலும் அவற்றினால் - அலைப்புண்டு திரியாதிருக்க வேண்டியுள்ளது.

(3) *இயேசுவைப் பின்பற்றுங்கள்* (வசனங்கள் 10-14). இந்தப் பகுதியின் கடைசி ஐந்து வசனங்கள் யூதத்துவத்தைக் கிறிஸ்தவத்துடன் நெரெதிராக ஒப்பிடுவதற்குப் பழைய ஏற்பாட்டுச் சொற்றொடராக்கத்தைப் பயன்படுத்துகின்றன.

*ஒரு பலிபீடம்.* பழைய உடன்படிக்கையின் கீழ் இருந்தவர்கள் கொண்டிராத ஒரு “பலிபீடத்தை” (பலியை) கிறிஸ்தவர்கள் கொண்டுள்ளனர் (வசனம் 10). இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்ட அவரது சிலுவையே அந்த பலிபீடமாக/பலியாக உள்ளது.

*ஒரு பாளையம்.* இயேசுவின் பலி “பாளையத்திற்குப் புறம்பே” செலுத்தப்பட்டது (வசனங்கள் 11, 13; காண்க வசனம் 12). இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் திரிந்தபோது, அவர்கள் தங்கள் கூடாரங்களை நிறுவி அங்கு தங்கியிருப்பதற்கு “பாளயம்” இருந்தது. “பாளையத்திற்கு புறம்பே” பலி செலுத்தப் பட்டதால், மக்கள் “பாளையத்துக்கு புறம்பே அவரிடத்திற்கு [இயேசுவினிடத்திற்கு]ப் புறப்பட்டுப்போக” வேண்டும் (வசனம் 13ஆ). “பாளையத்தை” விட்டுப் புறப்படுதல் என்பது, யூதத்துவ நிலைநாட்டுதலை விட்டுப் புறப்படுதலை அர்த்தப்படுத்திற்று. யூதக் கிறிஸ்தவர்கள் யூதத்துவத்துடன் இருந்த எல்லாப் பிணைப்புக்களையும் துண்டித்துப்போடும்படி புத்திகூறப்பட்டனர். அவர்கள் இயேசுவைப் பின்பற்றுவது, துன்புறத் தயாராக இருப்பது (வசனம் 13ஆ) மற்றும் தங்களுக்காகப் பரலோக “நகரம்” காத்திருப்பதால் எல்லாவற்றையும் தகுதியற்றவைகளாக எண்ணுவது அவர்களுக்கு அவசியமாயிருக்கிறது (வசனம் 14).

*ஒரு நகரம்.* நாம் ஒரு புனித யாத்திரையில் இருக்கிறோம் என்பதை வலியுறுத்துவதைக் கொண்டு நமது வசனப்பகுதி முடிவடைகிறது (13:14; காண்க 11:8-16). எனது போதகரான நீல் லைட்ஃபூட்[5] அவர்கள், தமது வகுப்பில் “14ம் வசனத்தை மனப்பாடம் செய்யுங்கள். அதை உங்கள் சுவற்றில் கூட எழுதி வைத்துக்கொள்ளுங்கள்” என்று வேண்டிக்கொண்டார். அவர், “இவ்வசனத்தை உண்மையாகவே நாம் விசுவாசித்தால் அதுதான் என்ன ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தும்! அது நமக்கு விஷயங்களைக் கருத்து நோக்கில் இடும். நம்மைக் கவலைப்படுத்துபவற்றில் அதிகமானவையும் நமக்கு எரிச்சல்

*மூட்டுபவற்றில் பல விஷயங்களும் அற்பமானவையாகக் காணப்படும்" என்று அவர் கூறினார். பின்பு அவர், "இவ்வசனமானது, நாம் வரவிருக்கும் நகரத்தை நாடித்தேடுகிறோம் என்று கூறுகிறது" என்று கூறினார். நீங்களும் நானும் எதை நாடித்தேடிக்கொண்டிருக்கிறோம்?*

---

குறிப்புகள்

[1]Neil R. Lightfoot, *Jesus Christ Today* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 43. [2]Ibid., 245. [3]*வழக்கம்போல "சகோதரர்கள்" என்ற வார்த்தை, ஆண் மற்றும் பெண் கிறிஸ்தவர்களைக் குறிப்பிடப் பொதுவில் பயன்படுத்தப் பட்டுள்ளது.* [4]*"தடை செய்யும்படுகுழிகள்" என்பது இந்த முதன்மைத் தலைப்பைச் சொற்றொடர்ப் படுத்தும் இன்னொரு வழியாக இருக்கும்.* [5]Neil R. Lightfoot, ACU extension class on Hebrews taught in Fort Worth, Texas, 26 October 1985.